# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் சமாதானத்திற்கான பிரகடனம்

இன்று, எமது அன்பிற்குரிய நாட்டு மக்கள் முன்னரெப்பொழுதும் இருந்திராத வாய்ப்பொன்றை எதிர் நோக்கிய நிலையில் உள்ளார்கள். பயங்கரவாதமும் வன்செயலும் முடிவுக்கு வந்துள்ளன. எம் அனைவருக்கும் மனக்காயத்தை ஆற்றுவதற்கும் நிலைபேறான சமாதானத்தையும் பாதுகாப்பையும் கட்டியெழுப்புவதற்கு தேவைப்படும் கால அவகாசம் கிடைத்துள்ளது. சனநாயகத்தினதும் குடியுரிமையினதும் விளைபயன்கள் சகலருக்கும் சமமாக கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கும் அனுபவிப்பதற்குமாக எங்களுக்கு இப்போது கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்வது எமது கடமையாகும்.

எமது நாட்டின் 67வது சுதந்திர தினத்தை கொண்டாடுகின்ற இவ் வேளையில், மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இந்நாட்டை பாதித்த துக்ககரமான மோதல் காரணமாக தங்களுடைய உயிர்களை இழந்த மற்றும் சுதந்திரம் கிடைத்த காலத்திலிருந்து வன்செயல்களால் பாதிக்கப்பட்ட இந்நாட்டின் சகல இனங்களையும் சமயங்களையும் சேர்ந்த இலங்கைப் பிரசைகளுக்கு நாம் எமது மரியாதைகளை செலுத்துகின்றோம்.

நாம் இப்பெருமிதமான சந்தர்ப்பத்தில், சகல பிரசைகளும் தேசிய நலன், தேசிய நல்லிணக்கம், நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றை அடைவதற்காக, சனநாயக வழிவகைகள் மூலமான நல்லிணக்க அணுகுமுறைகளைப் பின்பற்றுவதற்கான உறுதியை வழங்குகின்றோம். நாம் இதனைப் பொறுமை, விட்டுக்கொடுப்பு, சமரசம் என்பவற்றுடன் கூடிய மனப்பாங்குடன் அடைவதுடன் எமது பன்முக சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்குமாக, இந்நாட்டின் ஐக்கியத்தையும் ஆள்புல இறைமையையும் நிலைநிறுத்துவோம். சுதந்திரத்தையும் சனநாயகத்தையும் பாதுகாப்பதற்கும், இந்நாட்டிலுள்ள பன்முக சமூகங்களுக்கிடையேயான நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பதற்கும் உறுதியளிப்பதுடன், எல்லா சந்தர்ப்பங்களிலும் சமாதானப் பாதையில் பயணிப்போம் எனவும் வாக்குறுதி அளிக்கின்றோம்.

இந்நாட்டின் பிரசைகளின் இரத்தத்தைச் சிந்துவதன் மூலம் ஏற்படும் மன அதிர்ச்சி இனிமேலும் இந்நாட்டில் ஏற்படுவதற்கு ஒருபோதும் அனுமதிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான எமது கூட்டுப் பொறுப்பைக் கடைப்பிடிப்போம் என நாம் வாக்குறுதி அளிக்கின்றோம்.